1972 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மழை பெய்யவில்லை என்பதும் எந்தெந்தப் பகுதியில் என்பதும் அரசுக்குத் தெரியும். ஏனென்ருல், மழை பெய்தவுடனே அரசுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் எங்கெங்கு மழை பெய்திருக்கிறது என்ற தகவலை அனுப்புகிருர். எங்கே மழை பெய்யவில்லையோ, அங்கேயெல்லாம் மழையைப் பெய்விக்கச் செய்யும் அதிகாரம் இல்லையே என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, இப்படி அடிக்கடி வறட்சியாக இருக்கும் பகுதிகளில் நிரந்தரமான தீர்வு காண திட்டம் போட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அடிக்கடி வறட்சி எற்படுகிற மாவட்டங்களில் மத்திய அரசின் உதவியுடன் நிவாரண வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த மாதிரியான வறட்சியான பகுதிகளுக்கு நிரந்தரமாக ஏதாவது செய்வதற்கு இந்த அரசிடம் "மாஸ்டர் பிளான்" ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், மழை குறைந்துகொண்டே போகிறது என்று விஞ்ஞானிகள் சொல்கிருர்கள். இதற்கு என்ன காரணம் என்பதை அறிந்துகொண் டிருக்கிருேம். மழை ஆண்டுக்கு ஆண்டு குறைந்துகொண்டு வருகிறது. இதற்கு இயற்கைதான் காரணம். இதற்கு ஆவன செய்துவருகிருேம்.

Tenancy Records

* 228. *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether the Tenancy Records have been completed in this State; and

(*b*) if not, when this work is expected to be completed?

குடியானவர் ஆவணப்பதிவுப் பணிகள்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு உணவு–வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் குடியானவர் ஆவணப்பதிவு பணிகள் முடிந்து விட்டனவா ?

(இ) இல்லையெனில், இப்பணி எப்பொழுது முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?

THE HON. THIRU P. U. SHANMUGAM : (a)No.

(b) The work is expected to be completed by 31st August 1972 in the districts of Thanjavur, Tiruchirappalli and Madurai and by 31st December 1972 in the remaining districts.

THIRU A. R. DAMODARAN : May I know, Sir, whether it is proposed to issue pass books to all these tenants giving full details of the land held under the tenancy, the amount of lease which is to be collected, the amount of lease paid, etc.?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, டெனன்சி சட்டப்படி யார் யார் பதிவு செய்திருக்கிறார்கள் என்பதற்காக மூன்று மாவட்டங்களில் 31—8—1972-க்குள் பூர்த்தி செய்யவேண்டுமென்றும் மற்ற மாவட்டங்களில் 31—12—1972-க்குள் பூர்த்தி செய்யவேண்டுமென்றும் ஆணையை அரசு பிறப்பித்திருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்த 3 மாவட்டங்களில் எவ்வளவு குத்தகைதாரர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசு சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போட்டால், விவரங்கள் தருகிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, இந்த மாதிரியாக ரிகார்டுகளைச் சேகரிப்பதன் நோக்கம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, குத்தகைதாரர்கள் யார் யார் உண்மையிலேயே குத்தகைதாரர்களாக இருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்வதற்காக இப்போது பதிவு செய்யப்பட்டு வருகிறது. குத்தகைதாரர்களுக்கு சட்டப்படி பாது காப்புத்தர வேண்டும் என்பதற்காகத்தான் பதிவு செய்யப்பட்டு வருகிறது. மற்ற ரகசியங்களை இப்போது கேட்க வேண்டாம்.

Salt Board

* 229 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state the details of the work done so far by the "Salt Board" set up for the development of Salt based Industry?